# ‘எதிர்காலத்தை பாதுகாக்கும்’ பணியின் அடுத்தக் கட்டத்தில் குயிக் ஹீல்



சென்னை, செப். 25: தன்னலமற்ற மனிதநேயத்தின் மூலம் ‘எதிர்காலத்தைப் பாதுகாக்கும்‘ பணியை வழங்கி வரும், குயிக் ஹீல் டெக்னாலஜிஸ் லிமிடெட் சிஎஸ்ஆர் பிரிவான குயிக் ஹீல் அறக்கட்டளை, சென்னை, காட்டான்குளத்தூர், எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு ஆரோக்கியா யான் வடிவில் தாராள நன்கொடையை அளித்துள்ளது. ஆரோக்யா யான் ஒரு அதிநவீன நடமாடும் மருத்துவ கிளினிக் ஆகும், தொலைதூர மண்டலங்களில் உள்ள நோயாளிகளுக்கு இவ்வசதியைக் கொண்டு செல்ல இது வடிவமைக்கப் பட்டுள்ளது, அதே நேரத்தில் நோயறிதல், சிகிச்சைகள், வழக்கமான பரிசோதனைகள் போன்ற சுகாதாரச் சேவைகளையும் வழங்குகிறது. இந்த அறக்கட்டளை இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான புதிய தலைமுறை அறக்கட்டளையுடன் இணைந்து கிராமப்புறங்களில் தேவைப்படுபவர்களுக்கு மற்றும் தரமான மருத்துவச் சேவை கிடைக்காதவர்களுக்கு, கண் பரிசோதனை, பல் பராமரிப்பு, இதயநோய், தோல் நோய்கள், எலும்பு பராமரிப்பு, புற்றுநோய்த் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு போன்ற மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்கிறது.

குயிக் ஹீல் அறக்கட்டளையின் தலைவர் அனுபமா கட்கர் அவர்கள், குயிக் ஹீல் டெக்னாலஜிஸ் லிமிடெட் எம்டி மற்றும் சிஇஓ, டாக்டர் கைலாஷ் கட்கர் அவர்கள், மருத்துவ மனையின் சார்பில் டாக்டர் M.லோகராஜ், பிடி அறக் கட்டளையின் சார்பில் D.V.வெங்கடகிரி ஆகிய மதிப்புமிக்க சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பிரமுகர்கள் முன்னிலையில் இந்த நன்கொடை அளிப்பு விழா நடைபெற்றது.

இந்த முயற்சியின் மூலம், ஆரோக்கியா யான் ஒவ்வொரு ஆண்டும் அருகிலுள்ள கிராமங்களான செட்டிபுண்ணியம், வில்லியம்பாக்கம், சாஸ்திரிப்பாக்கம், மேட்டுத்தெரு, வீராபுரம் போன்ற பகுதிகளில் 60,000க்கும் மேற்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குயிக் ஹீல் அறக்கட்டளையின் தலைவர் அனுபமா கட்கர் தெரிவிக்கையில், “குயிக் ஹீலில் நாங்கள் சமூகத்திற்காக எங்களால் முடிந்ததை செய்ய உறுதி கொண்டுள்ளோம். குறிப்பாக முன்னெப்போதும் இல்லாத அளவில் உலகளாவிய தொற்று நோய்க்கு எதிராக நம் நாட்டு மக்கள் ஒன்றாக எதிர்கொண்ட கொடூரமான காலத்திற்குப் பிறகு, மருத்துவ உள்கட்டமைப்பின் தரத்தை உயர்த்துவது மிகவும் முக்கியமாக ஆகியுள்ளது.” என்றார்.